## மின்சார நண்பன்

மின்சார நண்பன் என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மத்திய அரசின் மின் துறை அமைச்சகத்துடன் இணைந்து துவக்கியுள்ளது.

மின்நுகர்வோரின் உற்ற நண்பனாக செயல்படகூடிய இத்திட்டத்தினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இன்று துவக்கிவைத்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மின் நுகர்வோருக்கு அவர்கள் பகுதியில் ஏற்பட உள்ள/ஏற்பட்டுள்ள மின் பராமரிப்பு பணிகள் குறித்த தகவல் குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்க இயலும்.

இதுவரை, தமிழகத்தை சேர்ந்த ஒருகோடியே அறுபது லட்ச மின் நுகர்வோரின் தகவல்கள் இதற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. ஊரக மின்மயமாக்கல் கழகத்தின் கணினி சேவையகத்தின் மூலம் திட்டமிட்ட மற்றும் மின்னூட்டி அளவிலான திட்டமிடப்படாத மின் தடை குறித்த தகவல் சம்பந்தப்பட்ட பகுதியில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மின்நுகர்வோரின் கைபேசிக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும்.